| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம்**<br>**வடக்கு மாகாணம்** | |
| | **மாதாந்த மதிப்பீடு** | |
| **தரம் - 10** | **தமிழ்மொழியும் இலக்கியமும்** | **ஓகஸ்ட் 2022** |

**பகுதி - I**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. "கொழுங்கன லென்ன எழுந்தார்" இங்கு **கனல்** என்பதன் பொருள்
    (1) நீர் (2) நெருப்பு (3) கரும்பு (4) கானல்நீர்

02. "மாக மடங்கலும் மால்விடையும்" இங்கு வந்துள்ள **விடை** என்பதன் பொருள்
    (1) எருது (2) பதில் (3) எருமை (4) பசு

03. "அனுகூலமாய அமைந்தது" இங்கு **அனுகூலம்** என்பதன் பொருள்
    (1) பிரதிகூலம் (2) தண்டனை (3) உதவி (4) பகை

04. "வாதம் செய்வதில் சமர்த்தர்..." இங்கு **வாதம்** என்பதன் எதிர்ச்சொல்
    (1) விவாதம் (2) சண்டை (3) பிரதிவாதம் (4) பிழை

05. "கண்ணே கலைமானே..." இங்கு **கலை** என்பதன் எதிர்ப்பாற்சொல்
    (1) பிணை (2) பிடி (3) அழை (4) பிணா

☑ **பின்வரும் வினாக்களிற்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

06. பிற்காலத் தேவைக்காகச் சேகரித்து வைக்கப்படும் செல்வம்
    (1) ஓம்படை (2) எய்ப்பில்வைப்பு (3) நிந்தகம் (4)ஓலக்கம்

07. கற்களின் கூட்டம் குவியல் போல மலைகளின் கூட்டம்
    (1) குழு (2) வரிசை (3) அணி (4) தொடர்

08. ஒரே பாடசாலையில் ஒன்றாகக் கற்றவர்
    (1) நண்பர் (2) உறவினர் (3) சகபாடி (4) உறவு

09. பின்வருவனவற்றுள் உவமைத்தொகை
    (1) கடற்கரை (2) சோறுகறி (3) பழச்சாறு (4) எறிகணை

10. உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக அமைவது
    (1) பாட்டு (2) கதவு (3) காற்று (4) சிறகு

(10X1= 10புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.

   ‘‘எட்டுணையானு மிரவாது தானீதல்’’

2. பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலைகளை எழுதுக.

   ‘யார் என்ன சொன்னாலும் அவன் கேட்க மாட்டான்’

3. பின்வரும் செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கிமாக மாற்றி எழுதுக.
   வாணன் பழமரம் ஒன்றை நட்டான்

4. பின்வரும் வாக்கியத்தை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.

   ‘எங்கை இப்ப அவசரமாய் போறாய்?’

5. ‘‘புதிய மக்களுக்கான பொது நூலகம் நகர மத்தியில் அமைக்கப்பட்டது.’’ இவ்வாக்கியத்தை மயக்கமற்ற வகையில் திருத்தி எழுதுக.

(5X2 = 10 புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாகன விடை தருக.**

1. ‘சென்னைச் சர்வகலாசாலையார் நடாத்திய பீ.ஏ பரீட்சையில் முதன்முதலில் சித்தியடைந்த ஈழத்துத் தமிழறிஞர்கள் யாவர்?

2. ‘வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்ற கூட்டம் எதற்காக நடாத்தப்பட்டது?

3. வாதப்பிரதிவாத மின்னல்கள், முழக்கங்கள் நடக்கின்றன.
   அ. இதில் இடம்பெற்ற வாதம் யார் யாருக்கிடையில் நடைபெறுகின்றது?
   ஆ. இவ்வரிகளில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

4. நல்லூர்க் கோயிலாருக்கும் பிராமணருக்குிடையில் நடைபெற்ற வாதத்தில்
   அ. கோயிலாருக்காக வாதிட்டவர் யார்?
   ஆ. பிராமணர்களுக்காக வாதிட்டவர் யார்?

5. வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற கூட்டத்திற்குத்
   அ. தலைமை வகித்தவர் யார்?
   ஆ. தலைமை வகிக்க வேண்டியவர் தலைமை வகிக்காமைக்கான காரணம் யாது?

(5X2 = 10 புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. பிறிற்றோ நேர்மையற்றவர் என்பது இக்கட்டுரையில் எவ்வாறு நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதனை விளக்குக.
2. நாவலர் எழுந்த விதத்தையும் நடந்த விதத்தையும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எவ்வாறு விளக்கியுள்ளார் என விபரிக்குக.

(2X10= 20 புள்ளிகள்)